# மோட்டார் வாகனக் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்ளும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

INSURANCE BOARD OF SRI LANKA

## உரிய பெறுமதிக்கு காப்புறுதி செய்யுங்கள்

வாகனத்தின் சந்தைப் பெறுமதிக்கு காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள். குறைந்த பெறுமதிக்கு காப்புறுதி செய்தால் குறைந்தளவு நட்ட ஈடு கிடைப்பதற்கும், கூடிய பெறுமதிக்கு காப்புறுதி செய்தால் சந்தைப் பெறுமதிக்கு மட்டும் நட்ட ஈடு கிடைப்பதற்கும் சந்தர்ப்பம் உள்ளது.





## காப்புறுதிப் பத்திரத்தை வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்

காப்புறுதிப் பத்திரத்தை உங்களுக்கு விளங்கக்கூடிய மொழியில் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். அதன் நிபந்தனைகள் மற்றும் காப்பீடுகள் பற்றி அறிந்துகொள்ளுங்கள். வாகனத்தை கூலிக்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதாயின், அதனை பூர்த்திசெய்யும் வகையில் பொருத்தமான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான பிணைப்பு

காப்புறுதித் தவணைக் கட்டணங்களை குறிப்பிட்ட காலவெல்லையினுள் (சாதாரணமாக 60 நாட்கள்) செலுத்துவதற்கு நீங்கள் உடன்பட்டீர்களானால், அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் தவணைக் கட்டணத்தைச் செலுத்துங்கள். இல்லாவிடில் காப்புறுதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படுவதுடன் அதன் கீழ் எவ்வித உரித்துகள் யாதேனுமிருப்பின் அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் உரிமை கோரமுடியாது.





## காப்புறுதி உரிமை

வாகனத்தின் காப்புறுதி உரிமை அவ்வாகனத்தின் உரிமையாளரிடமே உள்ளது. நீங்கள் கொள்வனவு செய்யும் வாகனத்திற்கு தாமதமின்றி உங்கள் பெயரில் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவ்வாறு செய்யப்படாவிடின், யாதேனும் விபத்தின் போது வாகனத்தின் முன்னைய உரிமையாளரின் பெயரில் இருக்கும் காப்புறுதிக் காப்பீட்டின் கீழ் உரித்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களால் முடியாது.

## காப்புறுதி நிறுவனத்தினைத் தேர்ந்தெடுக்கும் உரிமை

காப்புறுதிச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள எந்தவொரு காப்புறுதி நிறுவனத்தில் இருந்தும் அவசியமான காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனத்தில் இருந்து காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு யாரும் உங்களை வற்புறுத்த முடியாது.





## விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக அறியத்தாருங்கள்

வாகனம் விபத்துக்குள்ளாகியவுடன் உடனடியாக, அதுபற்றி காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்து, உரித்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். விபத்து தொடாபாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் வழங்குவது மோட்டார் வாகனச் சட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**இலங்கை காப்புறுதி சபை**, 11வது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி: 011 2396184-9 பக்ஸ்: 011 2396190-1
மின்னஞ்சல் முகவரி: info@ibsl.gov.lk வெப்தளம் : www.ibsl.gov.lk